


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு 2025 உயர்கல்வி வழிகாட்டி புத்தகத்தினை வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் போட்டி தேர்வு சிறப்பு திட்ட இயக்குநர் சி. சுதாகரன், IRPS, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலாளர் இரா.சுதன் (ஓய்வு), பள்ளி கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் உள்பட மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற கல்லூரி கனவு 2025 நிகழ்ச்சியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உண்டு உறைவிட பயிற்சி பெற்று, மத்திய அரசின் பணியாளர் தேர்வு வாரியம் (SSC), இரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB) மற்றும் வங்கிப்பணி தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் போட்டி தேர்வு சிறப்பு திட்ட இயக்குநர் சி. சுதாகரன், IRPS, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலாளர் இரா.சுதன் (ஓய்வு), பள்ளி கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் உள்பட மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

## பெரியார் - அண்ணா - கலைஞர் கனவை நிறைவேற்றும் முதலமைச்சர்!

# கல்லூரிக்குச் செல்லும் மாணவ - மாணவிகள் எண்ணிக்கை; இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் 52 சதவிகிதம்!

## ‘கல்லூரிக் கனவுத் திட்டம்’–2025 விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, மே 16–**

**சென்னையில் ‘கல்லூரிக் கனவுத் திட்டம் - 2025–ஆம் ஆண்டுக்கான வழிகாட்டி’ முகாமை நேற்று முன்தினம் (14.5.2025) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

**அப்போது அவர் `பள்ளிப் படிப்பு முடித்த பின்னர் அதோடு நின்றுவிடாமல் தொடர்ந்து உயர்கல்வி படிப்பது பற்றிய விழிப்புணர்வும் - வழிகாட்டுதல்களும் ‘கல்லூரிக் கனவு’ திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளன. கல்லூரிக் கனவு 2025–இல் பயன்பெறும் மாணவர்களின் எதிர்காலம் சிறக்க வாழ்த்துகள். தமிழ்நாட்டு இளைஞர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்’ என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை விவரம் வருமாறு:–**

நம் முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான, `நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ், `கல்லூரிக் கனவு - 2025’ திட்டத்தைத் தொடங்கி வைப்பதிலும், எஸ்.எஸ்.சி., ஆர்.ஆர்.பி. மற்றும் ஐ.பி.பி.எஸ். வெற்றிபெற்ற மாணவர்களைப் பாராட்டி, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்கு ஏராளமான மாணவர்கள், மாணவிகள் வந்திருக்கிறீர்கள்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் காணொலிக் காட்சி வாயிலாகப் பல்வேறு மாணவர்கள் இணைந்திருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, கல்லூரி பற்றிய கனவுகளுடன் இங்கு வந்திருக்கிறீர்கள்.

### அறிவுரை பிடிக்காது

2-K கிட்ஸ் உங்களுக்கு அறிவுரை சொன்னால், சுத்தமாகப் பிடிக்காது என்று எனக்கு தெரியும். தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வார். யார் எதைச் சொன்னாலும், அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாதே. ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்வி கேள். அப்படி கேள்வி கேட்டு, அது உன் பகுத்தறிவுக்கும், புத்திக்கும் எட்டினால் மட்டும் அதை ஏற்றுக் கொள் என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்வார்.

தந்தை பெரியார் அவர்கள் சொன்ன விஷயத்தை, யார் பின்பற்றுகிறார்களோ? இல்லையோ. இங்க வந்திருக்கின்ற `ஜென்- சி’ இளைஞர்கள் நீங்கள் அதிகமாகப் பின்பற்றுகிறீர்கள். அந்த அளவுக்கு இயல்பிலேயே அறிவும், ஆற்றலும் பெற்ற உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

### ‘கல்லூரிக் கனவுத் திட்டம்’

பள்ளிக்கூட படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்விக்காக வெளி உலகத்திற்கு இப்போதுதான் செல்லப் போகிறீர்கள். உங்களை பத்திரமாக கையைப் பிடித்து அழைத்துச் சென்று, உங்களுக்கெல்லாம் ஒரு சரியான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதற்குத்தான் இந்தக் `கல்லூரிக் கனவுத் திட்டம்’ செயல்படுத்தப்படுகிறது.



பல்வேறு சூழ்நிலைகளால் உயர்கல்வியில் சேர தயங்குகிற மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து, உரிய வழிகாட்டுதல்களைக் கொடுத்து, கல்லூரிகளில் சேர்த்து விடுவதுதான் இந்தக் கல்லூரிக் கனவுத் திட்டத்தின் ஒரே நோக்கம். அப்படித்தான் கல்லூரிக் கனவுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு வருடமும் ஒரு லட்சம் மாணவர்களை நாம் உயர்கல்வி படிக்க வைக்கப் போகிறோம்.

### வாழ்க்கைக்கு அடித்தளம்

நீங்கள் பள்ளியில் படிக்கும்போது பத்தாம் வகுப்பு தேர்வு மிக மிக முக்கியம். அதுதான் உங்கள் வாழ்க்கைக்கு அடித்தளம் என்று பெற்றோர்கள், ஆசிரியர்கள் சொல்லியிருப்பார்கள். அடுத்து 12–ஆம் வகுப்பு செல்லும்போது, 12–ஆம் வகுப்பு தான் உங்களின் வாழ்க்கையையே மாற்றப் போகிறது என்று சொல்லி இருப்பார்கள். இப்போது கல்லூரியில் நன்றாக படித்தால்தான் எல்லாமே கிடைக்கும் என்றும் சொல்லி, உங்களை பயமுறுத்துவார்கள்.

இவை எதுவும் உங்களை பயமுறுத்த மட்டும் சொல்கின்ற விஷயம் கிடையாது. படிப்புதான் உங்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கான திருப்புமுனை. இன்றைக்கு இவ்வளவு பேர் கல்லூரி செல்லப் போகிறீர்கள். 100 வருடத்திற்கு முன்பு நிலைமை இப்படி கிடையாது. உங்களில் பல பேரின் தாத்தா, பாட்டி பள்ளிக்கூட வாசலையே மிதித்திருக்க மாட்டார்கள். பள்ளிப் படிப்பையே தாண்டியிருக்க மாட்டார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை மாறி இருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகம் பேர், உயர் கல்வி படிக்கின்ற மாநிலமாக நம் தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது.

### இட ஒதுக்கீடு மிக முக்கியம்

அதற்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சிகளால், செயல்பாடுகளால் கிடைத்த இட ஒதுக்கீடு மிக மிக முக்கியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இட ஒதுக்கீடு கிடைத்ததால்தான், இன்றைக்கு எல்லோருக்கும் கல்வி சென்று சேர்ந்திருக்கிறது. அவர்களுக்கு உதவுவதற்காகத்தான் உயர்கல்வியில் சேரப் போகின்ற முதல்தலைமுறை மாணவர்களுக்கு அரசே அந்தக் கல்விக் கட்டணத்தைச் செலுத்தும் என்று 17 வருடத்திற்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதுமட்டுமில்லாமல், பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, கல்வி உதவித்தொகை, கல்லூரி சென்று வருதற்கு இலவச பயண அட்டை என்று கலைஞர் அவர்கள் ஏராளமான திட்டங்களை உருவாக்கி கொடுத்தார்கள்.

இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்வதற்கு ஒரே காரணம் நீங்கள் இந்த இடத்திற்கு வந்து சேர்வதற்கு ஒரு பெரிய இயக்கத்தின் உழைப்பு இருக்கிறது. கழக அரசு கொண்டு வந்த பல திட்டங்கள் இருக்கின்றன. இவ்வளவும் சேர்ந்துதான் இன்றைக்கு உங்களை எல்லாம் இந்த நிலைமைக்கு மேலே உயர்த்தி இருக்கிறது. இதற்கும் மேலும் உயர்த்த இந்த அரசு முயற்சித்துக் கொண்டு இருக்கிறது.

### சிறப்பான திட்டங்கள்

கலைஞரின் தொடர்ச்சியாக, இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி சேர்கின்ற மாணவர்களுக்கு` தமிழ்ப்புதல்வன் திட்டம்’, மாணவிகளுக்கு `புதுமைப் பெண் திட்டம்’ என்று சிறப்பான திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

இந்தத் திட்டங்கள் மூலமாக அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி சேர்கின்ற மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். உங்களில் பல பேருக்கு அந்த உதவித்தொகை கிடைக்கப் போகிறது.

### தமிழ்நாடு 52 சதவிகிதம்

கல்வியைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு வட இந்தியாவில் இருக்கின்ற நிலைமை வேறு. அங்கு இருக்கின்ற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளே பெரிய விஷயமாக இருக்கின்றன. அங்கு தமிழ்நாடு மாதிரி எல்லா குழந்தைகளும் பள்ளிகளில் சேர்க்கப்படுவது கிடையாது.

ஒருவேளை அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்தாலும், கல்லூரிகளில் சேருகின்ற மாணவர்களின் சதவிகிதம் தமிழ்நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தீர்கள் என்றால், மிகமிக குறைவு. ஜி.இ.ஆர் என்று சொல்வார்கள், (கிராஸ் என்ரோல் மென்ட் ரேசியோ). அதாவது, பள்ளிகளிலிருந்து உயர்கல்வி சென்று சேருகின்ற மாணவர்களின் சதவிகிதம் தமிழ்நாட்டில் பார்த்தீர்கள் என்றால் 52 சதவிகிதம். ஆனால், ஒட்டுமொத்த இந்தியாவின் சதவிகிதத்தை எடுத்து பார்த்தீர்கள் என்றால் வெறும் 29 சதவிகிதம்தான்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்கள் அடைய வேண்டும் என்றால் இன்னும் 10, 15 ஆண்டுகள் ஆகும். அந்த அளவுக்கு தமிழ்நாடு கல்வி வளர்ச்சியில் சிறப்பாக முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. அதற்கு முழு காரணம் நம் திராவிட இயக்க ஆட்சிதான்.

உயர்கல்வி விண்ணப்பங்களைப் பொறுத்தவரை நுழைவுத் தேர்வே இருக்கக் கூடாது என்பதுதான் கழக அரசின் ஒரே கொள்கை. ஆனால், புதிய கல்வி கொள்கையின் மூலமாக மருத்துவம், பொறியியலில் மட்டுமல்ல, கலைக் கல்லூரிகளில் கூட ஒன்றிய அரசு நுழைவுத் தேர்வை நுழைக்கப் பார்க்கிறது. அதனால்தான், இந்த புதிய கல்விக் கொள்கையை நம் முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் கடுமையாக எதிர்த்து வருகிறது.

### பொறுப்பாகப் படியுங்கள்

இவற்றையெல்லாம் விரிவாக உங்களிடம் பேசுவதற்குக் காரணம் நீங்கள் எல்லாம் பொறுப்பாகப் படித்து முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடுதான். உயர் கல்வி என்றாலே மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல் படிப்புகள் மட்டும் தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படித்தான் நாம் நினைத்துக்கொண்டு இருந்தோம்.

ஆனால், உலகம் ஒவ்வொரு நாளும் இன்றைக்கு தொழில்நுட்ப ரீதியாக, நவீனமாகிக்கொண்டே வருகிறது. அதற்கும் தகுந்த மாதிரி படிப்புகளும் புதிதாக வந்துகொண்டு இருக்கின்றன.

இப்போது ஏ.ஐ என்று சொல்கின்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. அதிலேயே டேட்டா சயின்ஸ், சைபர் செக்யூரிட்டி, குவாண்டம் கம்யூட்டிங் என்று தனித்தனியாக படிப்புகள் இருக்கின்றன. இவையெல்லாம் சில வருடங்களுக்கு முன்பு, நம்மில் யாருக்கும் தெரியாது. இவையெல்லாம் கண்டுபிடிக்கப்படாத புதிய படிப்புகள். ஆனால், இப்போது பெருகி வரும் வேலைவாய்ப்புகளால் நிறைய பேர் இந்தப் படிப்புகளை விரும்பிப் படிக்கிறார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் இந்த கல்லூரிக் கனவு வழிகாட்டுதல் நிகழ்ச்சியை நாம் நடத்திக்கொண்டு இருக்கிறோம். அதன்படி இந்த நிகழ்ச்சி இங்கு நடக்கிறது.

### திறன் மேம்பாட்டு பயிற்சி

இங்கு கல்வியாளர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் உங்களுக்கு உயர் கல்விக்கான வழிகாட்டுதல்களைத் தருவார்கள். இவற்றை நீங்கள் கவனமாகக் கேட்டு கல்லூரியில் உங்களுக்கு ஆர்வமுள்ள படிப்பை நீங்கள் தேர்ந்தெடுத்துப் படியுங்கள். கல்லூரியில் படிப்பதற்கு மட்டுமல்ல, கல்லூரி முடித்துவிட்டு வேலைக்குச் செல்வதற்கும் நம் ‘நான் முதல்வன்’ திட்டம் துணை நிற்கும். தனியார் துறை வேலைக்குச் செல்ல, `வேலைவாய்ப்பு சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி (ஜாப் ஓரியண்டட் ஸ்கில் ட்ரைனிங்)’ நான் முதல்வன் திட்டம் தந்துகொண்டு இருக்கிறது. அதேபோல் அரசுத் துறைப் போட்டித் தேர்வுக்கு நிகராக `நான் முதல்வன்’ போட்டித் தேர்வுகள் பிரிவு இருக்கிறது.

இதன் மூலம் உதவித்தொகையுடன் தங்கிப் படிக்கின்ற வசதியையும் நம் அரசு செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவின் மூலம் இந்த வருடம் 50 தமிழ்நாட்டு மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றிபெற்று இருக்கிறார்கள். இது மிகப்பெரிய ஒரு சாதனை.

எப்படி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றி பெற்று இருக்கிறார்களோ அதேமாதிரி எஸ்.எஸ்.சி, ஆர்.ஆர்.பி., ஐ.பி.பி.எஸ்., தேர்வுகளுக்கு நான் முதல்வன் மூலமாகப் பயிற்சி பெற்ற மாணவர்கள் 58 பேர் வெற்றி பெற்று இருக்கிறீர்கள். அவர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாணவர்களுக்கு நம்பிக்கை

உங்கள் 58 பேரின் வெற்றி, அரசுப் பணி கனவுடன் தயாராகிக் கொண்டிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு நம்பிக்கையை தந்துகொண்டு இருக்கிறது. அதற்கு உங்கள் எல்லோருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை பல்வேறு உயரங்களுக்கு அழைத்துச் செல்ல ‘நான் முதல்வன்’ திட்டம்’ இருக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நன்றாகப் படிப்பது மட்டும்தான். ஆகவே இன்றைக்கு கல்லூரி கனவு திட்டத்தின் மூலமாக பயன்பெறப்போகின்ற அத்தனை மாணவர்களுக்கும், எஸ்.எஸ்.சி, ஆர்.ஆர்.பி., ஐ.பி.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றி பெற்ற வருங்கால அதிகாரிகளுக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.




தி.மு.க. தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்க அலுவலக வளாகத்தில் தீர்மானக் குழு தலைவர் கவிஞர் தமிழ் தாசன் தலைமையில் தீர்மானக்குழு செயலாளர்கள் மீ.அ. வைத்தியலிங்கம் , கீரை எம்.எஸ்.விஸ்வநாதன், அக்ரி கே.பி.டி.கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் சிறப்புரை ஆற்றினார். மதுரையில் வரும் ஜூன் முதல் நாள் நடைபெறும் தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தலைமையால் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் தயாரிப்புப் பணிகள் பற்றி பேசப்பட்டது. கழக ஆக்கப் பணிகள்; வரும் ஜூன் மூன்றாம் நாள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளை கொண்டாடுவது பற்றியும் பேசப்பட்டது. மறைந்த தீர்மானக் குழு உறுப்பினர் நெல்லை சிவகிரி ப.ஆ.சரவணன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானக் குழு துணைத் தலைவர் டாக்டர் மாசிலாமணி வரவேற்புரையாற்றினார். இணைச் செயலாளர் வ. சத்தியமூர்த்தி நன்றி கூறினார். கூட்டத்தில் பார் இளங்கோவன், சுப. த. திவாகரன், தேனி ஜெயக்குமார், ச. தங்கவேல், வேங்கடபதி , மிசாசி ராம நாதன், ஆர். சேது மாதவன், ஆதிசங்கர், டி.டி. ரெஜினால்ட், எம். வி. வெற்றிச்செல்வன் செஞ்சி சிவா மூ.ரா. செல்வராஜ், ஆ.நாச்சிமுத்து, எம். வி. கோபால் என். வி. காமராஜ், நீலகண்டன் பொள்ளாச்சி அதிபதி ஆகிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புழல் எம். ஜெயபால்**
**மே 16 (2013)**



திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், செங்குன்றம் பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட தோழர்களில் இவரும் ஒருவர்.

கல்லூரியில் படிக்கும் காலந்தொட்டு தி.மு.க. மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர்.

புழல் ஒன்றிய பெருந்தலைவராகவும், மாநில பெருந்தலைவர்கள் மன்ற செயலாளராகவும், சைதை தாலுக்கா வேளாண் விளைபொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத் தலைவராகவும் சிறப்புற பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணி புரவலராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**